2000 மே 11]

பிரிக்கிறார்கள், அதிலே எடை போடுகிறார்கள். பிறகு லாரியிலே ஏற்றுகிறார்கள். அப்படி சொந்தமாகவே அங்கு இருக்கிறார்கள். ஆனால், சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தைப் பொறுத்தவரை நுகர்பொருள் வாணிபக் கழகம், அதேபோல் பல்வேறு தனியார் நிறுவனங்கள், பாடநூல் நிறுவனங்கள், TASMAC போன்ற அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சரக்கோடு அந்த இடத்தை அவர்களுக்கு வாடகைக்கு விடுவது மட்டுமே எங்களுடைய பணி. அந்தச் சரக்கை ஏற்றி, இறக்க அந்த நிறுவனமே ஆள் வைத்திருக்கிற காரணத்தால், நேரடியாகச் சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திலே எந்த மூட்டை தூக்கும் தொழிலாளர்களும் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் நிரந்தரப்படுத்த வாய்ப்பே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 593, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

593—

கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி

***26247—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு தஞ்சையிலிருந்து பிரித்து, திருச்சியில் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரும் காலங்களில் ஆய்வு செய்து, கரூரில் திறக்க ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய அரசு

TRUTH ALONE TRIUMPHS

[2000 மே 11

பதிவு மூப்பு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுறவுத் துறையில் பணியிடங்களை நிரப்பி வருகிற காரணத்தால், இப்போது கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பெற்றவர்களின் வீடு தேடி வேலை கிடைக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே கரூர் மாவட்டத்தில் ஒரு பயிற்சிப்பள்ளியை ஏற்படுத்தித் தர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 5 இடங்களிலே புதிய கூட்டுறவுப் பட்டயப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இந்த ஆண்டு எங்கெங்கு, எந்தெந்த மாவட்டங்களில் இல்லையென்று அறிந்து, அந்த மாவட்டங்களில் வேண்டுகோள் வைப்பார்களேயானால் திறக்கலாம் என்று நமது மானியக் கோரிக்கையிலே சொல்லியிருக்கிறோம். அதற்கேற்ப நிச்சயமாகத் திறக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வாசுகி முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர், திருச்சி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி பள்ளிகளில் கரூர் மாவட்டத்திற்கு எவ்வளவு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.நா. நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரக் கணக்கு என்னிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 594, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

594—

ஆவின் பால் நிலையம்

***32612—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, முடிச்சூர் கிராமத்தில் ஆவின் பால் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்